செ.வெ.எண்: 78 நாள்:09.02.2018

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**
**மகளிர் திட்டம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், திருநெல்வேலி**
**வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் நிறுவன வேலைவாய்ப்பு முகாம் (தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு) / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப்நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் 2017–18–ஆம் ஆண்டிற்கு, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் ஊரக இளையோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் முகாம் நடத்தி அதன் மூலம் தகுதியான அளவில் ஊதியம் கிடைத்திட வழி நடத்திடும் பொருட்டு, DDU-GKY திட்டத்தின் கீழ் 2017–18–ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. அதன்படி 17.02.2018 அன்று பாளையங்கோட்டை செயின்ட் ஜான்ஸ் கல்லூரியில் வைத்து மேற்படி முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் 100க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள், தங்கள் நிறுவனத்தில் பணிபுரிவதற்கு தேவையானவர்களைத் தேர்வு செய்ய உள்ளனர். இம்முகாமில் மாற்றுத் திறனாளிகளின் கல்வித்தகுதி மற்றும் திறன் அடிப்படையில் அவர்களை தேர்வு செய்யும் பொருட்டு தனியார் நிறுவனங்கள் கலந்து கொள்ள உள்ளது. இதற்கென தனி அரங்குகள் அமைக்கப்படவுள்ளன. 5ம் வகுப்பு முதல் பட்டபடிப்பு வரை படித்த, ITI, Diploma பயிற்சி பெற்ற மற்றும் பெறாத 18 முதல் 40 வயதுக்குட்பட்ட மாவட்டத்தின் அனைத்து வட்டார, ஊரக மற்றும் நகர்புற பகுதி மற்றும் மாவட்டத்தில் பிறபகுதிகளைச் சார்ந்த ஆண்/பெண் இருபாலரும் இம்முகாமில் பங்கேற்கலாம்.

விருப்பமுள்ள நபர்கள் 17.02.2018 (சனிக்கிழமை) **காலை 09.30** மணிக்கு பாளையங்கோட்டை செயினட் ஜான்ஸ் கல்லூரியில் விண்ணப்பப் படிவத்தினை நேரடியாகப் பெற்று தங்கள் விபரங்களைப் பதிவு செய்து வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளலாம். மேலும், அனைவரும் தங்களது கல்விசான்று மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் நகல் உள்ளிட்ட இதர சான்றுகளுடன் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தொடர்புக்கு

**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்**
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
(காவல் ஆணையர் அலுவலக பழைய கட்டிடம்,
முதல்தளம்),
திருநெல்வேலி தொலைபேசிஎண் : 0462 / 2500302, 2500303

**வட்டார வளர்ச்சி அலுவலகம் ( வ.ஊ)**
**தொலைபேசி எண்கள்:**

| | | | |
|---|---|---|---|
| ஆலங்குளம் | 04633-270124 | இராதாபுரம் | 04637 - 254125 |
| அம்பாசமுத்திரம் | 04634-250397 | செங்கோட்டை | 04633 - 233058 |
| சேரன்மகாதேவி | 04634-260131 | தென்காசி | 04633 - 280318 |
| கடையம் | 04634-240428 | வள்ளியூர் | 04637 - 220242 |
| களக்காடு | 04635-265532 | சங்கரன்கோவில் | 04636 - 222398 |
| கீழப்பாவூர் | 04633-250223 | குருவிகுளம் | 04632 - 251234 |
| நாங்குநேரி | 04635-250229 | மேலநீலிதநல்லூர் | 04636 - 284129 |
| பாளையங்கோட்டை | 0462-257092 | கடையநல்லூர் | 04633 - 240250 |
| பாப்பாக்குடி | 04634-274540 | வாசுதேவநல்லூர் | 04636 - 241327 |
| | | மானூர் | 0462 - 2485123 |

என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.